அலகு 3

# அமைப்புகள்



## 3.1 ஒலிகளில் அமைப்புகள்

**கலைச் சொற்கள்**
ஒலிகள்
அமைப்பு
சொடுக்கு
இலை

### பயணம் செய்வோம்

**போகும் வழியெல்லாம் ....**

மாட்டு வண்டியின் சத்தம்
கட முட கட    கட முட கட    கட முட கட
மாட்டு வண்டியின் சத்தம் கட முட கட
போகும் வழியெல்லாம் ...





குதிரை வண்டியின் சத்தம்
டக் டக் டிக்    டக் டக் டிக்    டக் டக் டிக்
குதிரை வண்டியின் சத்தம் டக் டக் டிக்
போகும் வழியெல்லாம் ...

மிதிவண்டி மணிச் சத்தம்
ட்ரிங் கிளிங் ட்ரிங்    ட்ரிங் கிளிங் ட்ரிங்    ட்ரிங் கிளிங் ட்ரிங்
மிதிவண்டி மணிச் சத்தம் ட்ரிங் கிளிங் ட்ரிங்
போகும் வழியெல்லாம் ...





மோட்டார் வண்டியின் சத்தம்
டப்டப்டுப்    டப்டப்டுப்    டப்டப்டுப்
மோட்டார் வண்டியின் சத்தம் டப்டப்டுப்
போகும் வழியெல்லாம் ...

தொடர் வண்டியின் சத்தம்
சிக்கு புக்கு சிக் சிக்கு புக்கு சிக் சிக்கு புக்கு சிக்
தொடர் வண்டியின் சத்தம் சிக்கு புக்கு சிக்
போகும் வழியெல்லாம் ...



**ஆசிரியருக்கான குறிப்பு**

ஆசிரியர் பாடலைப் பாடக் குழந்தைகளை ஊக்குவித்தல் வேண்டும். குழந்தைகளுடன் சேர்ந்து ஆசிரியர் பாடலைச் செய்கைகளோடு பாட வேண்டும்.



2nd std Maths 1-term Unit_3_Tamil.indd 40    12/29/2019 10:43:56 AM

## கற்றல்


ஒலி அமைப்புகளை உற்று நோக்கி மீண்டும் செய்க.


கைதட்டு


கைதட்டு. கைதட்டு...

10 முறைகள்


கைதட்டு. கைதட்டு...


மேசையைத் தட்டு

10 முறைகள்


கைதட்டு. கைதட்டு...


மேசையைத் தட்டு
மேசையைத் தட்டு


சொடுக்குப்போடு


6 முறைகள்

மேலே உள்ளவாறு பல வழிகளில் ஒலி அமைப்புகளை உருவாக்கலாம்.

## செய்து பார்

வேறுபட்ட எண்ணிக்கையில் கை தட்டுதல், மேசை தட்டுதல், சொடுக்குதல் வழியாக ஒலி அமைப்புகளை நீங்களே உருவாக்குங்கள்.


1 முறை


2 முறை


2 முறை

ICU9M4

## கூடுதலாக அறிவோம்

இசை என்பது ஓர் ஒழுங்கமைவில் பல்வேறு இசைக்கருவிகளால் எழுப்பப்படும் ஒலி அமைப்புகளே ஆகும்.





2nd std Maths 1-term Unit_3_Tamil.indd 41 12/29/2019 10:43:57 AM

## செயல்பாடு

### பாத்திரங்களைக் கொண்டு ஒலி அமைப்புகளை உருவாக்குதல்

வழிமுறை :



- குழந்தைகளை இரு குழுக்களாகப் பிரிக்கவும்.
- முதல் குழுவில் உள்ள குழந்தைகள் தட்டையும், கரண்டியையும் இரண்டாம் குழுவில் உள்ள குழந்தைகள் டிபன்பாக்சையும், கரண்டியையும் எடுத்துக்கொள்ளவும்.
- ஆசிரியர் 1, 3 எனக் கூறினால், முதல் குழு ஒரு முறையும் இரண்டாம் குழு மூன்று முறையும் பாத்திரத்தைக் கரண்டியால் தட்டி ஒலி எழுப்ப வேண்டும். இவ்வாறு ஆசிரியர் அடுத்த இரு எண்களைக் கூறும் வரை இது போலத் தொடரலாம்.



## முயன்று பார்

### என் சொந்த இசை

அருகாமையில் கிடைக்கும் பொம்மைகள், குச்சிகள் ஆகியவற்றைக்கொண்டு உங்களுக்கான ஒலி அமைப்புகளை உருவாக்குக.







## மகிழ்ச்சி நேரம்

நமக்குச் சொந்தமான இசைக்கருவியைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள படிகளைக் கொண்டு நாமே உருவாக்குவோம்.



**படி 1**

ஒரு டின், பலூன், கத்தரிக்கோல் இரப்பர்பேண்ட் மற்றும் 2 குச்சிகளை எடுத்துக்கொள்வோம்.



**படி 2**

பலூனைப் படத்தில் உள்ளவாறு வெட்டவும்



**படி 3**

டின்னின் மீது பலூனைப் பொருத்தவும்.



**படி 4**

உங்களுக்குப் பிடித்தமான ஒலி அமைப்பை உருவாக்கி நண்பர்களுடன் பகிரவும்.



2nd std Maths 1-term Unit_3_Tamil.indd 42 12/29/2019 10:43:59 AM

## 3.2 உடலசைவுகளுடன் கூடிய ஒலி அமைப்புகள்

**பயணம் செய்வோம்**

கும்மியாட்டம்

கலைச் சொற்கள்
உடல் அசைவுகள்
ஒலிகள்




உற்று நோக்கிக் கலந்துரையாடு :

1. மேலே உள்ள படத்தில் நீங்கள் காண்பது என்ன?
2. இம்மாதிரியான நடனம் எந்தத் தருணங்களில் நடைபெறும்?
3. எந்த ஒலி கும்மியாட்டத்திற்கு அடிப்படையாக அமைகிறது?

**ஆசிரியருக்கான குறிப்பு**

கும்மி மற்றும் கோலாட்டப் பாடலைச் செய்கையுடன் பாடிக் காண்பித்து அவற்றிலுள்ள அமைப்புகளைக் குழந்தைகள் அறிய ஆசிரியர் உதவி செய்யலாம்.



2nd std Maths 1-term Unit_3_Tamil.indd 43 12/29/2019 10:44:00 AM

## கற்றல்

### பூமி – வானம் விளையாட்டு

கீழே கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளின் படி பூமி - வானம் விளையாட்டை விளையாடுக.



ஆசிரியர் பூமி எனக் கூறினால் மாணவர்கள் தங்கள் கைகளைக் கீழ்ப்பக்கமாகப் படத்தில் உள்ளவாறு தட்டுதல் வேண்டும்.



ஆசிரியர் வானம் எனக் கூறினால் மாணவர்கள் படத்தில் உள்ளவாறு மேல் நோக்கிக் கைகளைத் தட்டுதல் வேண்டும்.


உடலசைவுடன் ஒலி அமைப்பை விளையாடி மகிழ்வோம்.

## செய்து பார்

### ஆட்டம் ஆட்டம் ஆட்டம்

கொடுக்கப்பட்டப் படத்திலுள்ள அமைப்பினை உற்று நோக்குக. பொருள்களைக் கொண்டு உடலசைவுடன் கூடிய ஒலி அமைப்புகளை உருவாக்குக.

முதல் முறை | இரண்டாம் முறை



**ஆசிரியருக்கான குறிப்பு**

வேறுபட்ட வரிசைகளில் மாணவர்கள் அமைப்புகளை உருவாக்க ஆசிரியர் உதவலாம். அவர்களுக்கு 1, 2, 3, 4 எனக் கூறி உடலசைவுடன் கூடிய ஒலி அமைப்புகளை உருவாக்க வழிகாட்டலாம்.



2nd std Maths 1-term Unit_3_Tamil.indd 44 12/29/2019 10:44:00 AM

## கூடுதலாக அறிவோம்

கும்மி, கோலாட்டம், ஒயிலாட்டம், கரகாட்டம், பரதம் உள்ளிட்ட நடன வகைகளில் உடலசைவுடன் கூடிய ஒலி அமைப்புகளே இடம் பெறுகின்றன.







## 3.3 வண்ணங்களில் அமைப்புகள்

## பயணம் செய்வோம்

நம்முடைய வனத்திலே ...



**ஆசிரியருக்கான குறிப்பு**

படத்திலுள்ள விலங்குகளின் வண்ண அமைப்புகளைக் குழந்தைகள் உற்று நோக்க ஆசிரியர் உதவி செய்ய வேண்டும். மேலும் அவர்கள் உற்றுநோக்கிய வண்ண அமைப்புகளைப் பற்றிப் பேச ஊக்குவிக்க வேண்டும்.



2nd std Maths 1-term Unit_3_Tamil.indd 45 12/29/2019 10:44:01 AM


## கற்றல்

கீழ்க்காணும் பொருள்களில் உள்ள வண்ண அமைப்புகளை உற்றுநோக்கி அடையாளம் காண்க.



## செய்து பார்

வண்ணமிட்டு அமைப்பை முழுமை செய்க





2nd std Maths 1-term Unit_3_Tamil.indd 46 12/29/2019 10:44:02 AM

## முயன்று பார்

சூழலில் நீ காணும் வண்ண அமைப்புடன் கூடிய பொருள்களைச் சேகரி. அவற்றில் உள்ள அமைப்புகளை விவாதிக்க.

## கூடுதலாக அறிவோம்

ஆடை உருவாக்கத்திலும், அலங்கரிப்பதிலும், கோலமிடுவதிலும் வண்ண அமைப்புகளே உள்ளன.










## செயல்பாடு

### தோரணம் செய்தல்

கீழ்க்காணும் முறையில் வண்ணத் தாள்களை ஒட்டித் தோரணமாகத் தயாரிக்க.







## மகிழ்ச்சி நேரம்


### ஆடையை வடிவமைப்போம்


உனக்குப் பிடித்த வண்ண அமைப்பைப் பயன்படுத்திக் கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆடையை வடிவமைக்க.

KWGLRR











2nd std Maths 1-term Unit_3_Tamil.indd 48 12/29/2019 10:44:03 AM